//மின்னஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை – 600 006
ந. க. எண். 33510 / அ4 / இ4 / 2022, நாள். 07 .12.2022.

---

**பொருள் ;** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பயிற்சி – பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மூலம் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி நடத்துதல் – 31.10.2022 நிலவரப்படி பயிற்சி பெறவேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்களின் பட்டியல் அனுப்பக் கோருதல் – சார்பு.

******

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களில் (நேரடி நியமனம் மூலம் உதவியாளராக நியமனம் பெற்றவர்கள் உட்பட) பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறவேண்டி நிலுவையில் உள்ள பணிவரன்முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் / நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவியாளர்களின் பெயர் பட்டியலை மட்டும் மாவட்ட அளவில் தொகுத்து **08.12.2022க்குள்** இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்குக் கடிதம் வாயிலாகவும் / (அ4 பிரிவு மின்னஞ்சல் முகவரிக்கு) மின்னஞ்சலிலும் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இளநிலை உதவியாளர்களுக்கு நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்ற நிலையில் பணிநியமனம் பெற்று இதுநாள் வரை பணிவரன்முறை செய்யப்படாத பணியாளர்கள் அனைவருக்கும் உடன் பணிவரன்முறை செய்து, அப்பணியாளர்களின் விவரங்களையும் இணைக்கப்பட்டுள்ள Excel படிவத்தில் பூர்த்தி செய்தும், மற்றும் நேரடி நியமன உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படாமல் நிலுவையில் உள்ள பணியாளர்கள் சார்பாக உரிய கருத்துருக்களை 10.12.2022க்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கும், (cosea4sec@gmail.com) அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. நாளது வரை பணிவரன்முறை செய்யப்படாத இளநிலை உதவியாளர்கள் / நேரடி நியமன உதவியாளர்களின் பணிவரன்முறை சார்ந்து துரித நடவடிக்கை எடுத்து, அவர்களைப் பயிற்சிக்கு அனுப்பிட வழிவகை செய்திட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இணைப்பு :** படிவம்

**இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).**

**பெறுநர் –** அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல் :–** திட்ட இயக்குநர், மாநிலத் திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
**நகல் :–** இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
**நகல் :–** இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
**நகல் :–** இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
**நகல் :–** உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
**நகல் :–** இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.

} தங்கள் அலுவலகம் சார்ந்த விவரங்களை அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நகல் :–** இவ்வலுவலக "**அ2**" பிரிவு (இவ்வலுவலகம் சார்ந்த விவரங்களை அளிக்கும் பொருட்டு).

படிவம்

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் (திரு. / திருமதி. / செல்வி.) | ஆண் / பெண் | நியமன முறை | பிறந்த நாள் (நாள், மாதம், ஆண்டு) | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை நாள் (நாள், மாதம், ஆண்டு) | தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வில் உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் (நாள், மாதம், ஆண்டு) | நேரடி நியமன உதவியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் (நாள், மாதம், ஆண்டு) | நேரடி நியமன உதவியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (நாள், மாதம், ஆண்டு) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

**முதன்மைக் கல்வி அலுவலர்.**

<u>குறிப்பு :</u>

பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெற நிலுவையில் உள்ள இளநிலை உதவியாளர் / உதவியாளர் (நேரடி நியமனம் உட்பட) இணைக்கப்பட்ட **(MS Excel) படிவத்தில், மருதம் Fontல்** தொகுத்து, நிலுவைப் பட்டியலை உடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது).